**நியதிகளும் நிபந்தனைகளும் - DIRECT DEBIT**

நியதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்வதன் மூலம் இணைய்தளம்/செயலி வாயிலான நடாத்தப்படுகின்ற கொடுப்பனவுக் பரிவர்த்தனைகளுக்காக உங்களது FriMi சேமிப்புக் கணக்கில் பற்றுவைக்கப்படுகின்ற DIRECT DEBIT இற்கு நீங்கள் சம்மதம் தெரிவிக்கின்றீர்கள்

1. FriMi DIRECT DEBIT சேவைக்காக பதிவசெய்வதன் மூலம் வாடிக்கையாளரின் FriMi பயனர் அடையாளம் வணிகரின் இணையளத்தில் /செயலியில் தானியக்கமாக சேமிக்கப்படும் என்தை வாடிக்கையாளர் ஏற்றுக்காள்கின்றார். இதன் விளைவாக, ஒவ்வொரு முறையும் வாடிக்கையாளர் வணிகரின் இணைய்தளத்தில் /செயலியில் கட்டணம் செலுத்தும் முறையாக FriMi ஐத் தெரிவுசெய்து, கொடுப்பனவு பரிவர்த்தனையை நிறைவசெய்கின்றபோது, வாடிக்கையாளரிடமிருந்து ஏதேனும் மேலதிக உறுதிப்படுத்தலை/சரிபார்த்தலை தேவைப்படுத்தாது FriMi சேமிப்புக் கணக்கில் கட்டணத் தொகை தானியக்கமாக பற்று வைக்கப்படும்.

2. DIRECT DEBIT சேவையைப் பயன்படுத்தி வாடிக்கையாளரால் செய்யப்படும் அனைத்து கட்டணங்களுக்கும் வாடிக்கையாளர் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறார். அதற்கமைய, வாடிக்கையாளர் கட்டணத்தை உறுதிப்படுத்தும் பொத்தானைக் கிளிக் செய்தவுடன், பணம் செலுத்தப்பட்டதாகக் கருதப்பட்டு, திரும்பப்பெறமுடியாமல் நிறைவேற்றப்பட்டதாகும்.

3. DIRECT DEBIT சேவைக்கான பதிவசெய்தலானது வாடிக்கையாளரின் தனியுரிமை இடர்நேர்விலானதாகும். அதற்கமைய, இச்சேவைக்கு பதிவுசெய்வதன் விளைவாக வணிகரின் இணைய்தளம் /செயலி வாயிலாக பரிவர்த்தனையொன்றைச் செயன்முறைப்படுத்துகையில் வாடிக்கையாளர் மூலமான ஏதேனும் பிழையின் /தவறின் விளைவானவை உள்ளடங்கலாக வாடிக்கையாளருக்கு ஏற்படும் /அவர் பாதிக்கப்படும் ஏதேனும் இழப்பிற்கு/சேதங்களுக்கு நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சி பொறுப்புடையதாகவிராது/ஆளாகாது.

4. வாடிக்கையாளர் அல்லது நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி அதனை இரத்துசெய்யும் வரை DIRECT DEBIT சேவைசெயற்பாட்டி இருக்கும்.

5. இதில் வேறு வகையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டாலன்றி, இந்நியதிகளில் மற்றும் நிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள பெரிய எழுத்துக்களினான சொற்பதங்கள் வாடிக்கையாளரினால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட FriMi நியதிகள் மற்றும் நிபந்தனைகள் (“பிரதான ஒப்பந்தம்”) கொண்டிருக்கும் அதே பொருளை கொண்டிருக்கும்.

6. இந்நியதிகளும் நிபந்தனைகளும் பிரதான ஒப்பந்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும். அதன் ஏற்பாடுகள் இதில் கூட்டிணைக்கப்பட்டிருந்தாலும் சரி கூட்டிணைக்கப்படவில்லையாயினும் சரி அதனை பொருட்படுத்தாது வாடிக்கையாளர் பிரதான ஒப்பந்தத்தின் ஏற்பாடுகள் மூலம் பிணிக்கப்படுவார்.